**Judicial Magistrate Court No.I, Chengalpattu.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : C.C.No.472/2010 |
| Deposition of witness for | : PW 1 |
| Name | : கிரண்குமார் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 40/2012 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.12.2012.

**முதல் விசாரணை-** தற்சமயம் நான் அசிஸ்டண்ட் ஜென்ட்ரல் நிலை ஒன்றாக மையிலாப்பூரில் பணிபுரிந்து வருகிறேன். இந்த சம்பவ காலத்தில் நான் சென்னை விமான நிலையத்தில் உதவி குடியுரிமை அதிகாரியாக பணிபுரிந்தேன். இவ்வழக்கில் 1வது எதிரியான முகமது அம்ஜாத்தை தெரியும். பட்டியல் சாட்சி ஒன்று நகராஜன் முதன்மை குடியுரிமை அதிகாரியை தெரியும். அவர் தற்சமயம் பணி ஓய்வு பெற்றுள்ளார். 20.3.2009ம் தேதி மாலை 6.00 மணிக்கு நான் சென்னை விமான நிலையத்தில் உதவி குடியுரிமை அலுவலராக பணியில் பணிபுரிந்துக் கொண்டிருக்கும் போது அப்போது சாதாரணமாக வெளிநாடு செல்லும் பயணிகளுக்கு இமிக்கிரேஸன் செய்து கொண்டிருந்தேன். என்னுடைய பணியானது வெளிநாடுக்கு செல்லும் நபரின் பாஸ்போர்ட் மற்றும் விசாக்களை உண்மைதன்மை அறியும் பணியாகும். இவ்வழக்கின் 1வது எதிரி முகமது அம்ஜாத் என்னிடம் இமிக்கிரேஸன் கேட்டு வந்தார். அவர் வைத்திருந்தார் முகமது அம்ஜாத் என்ற பாஸ்பார்ட்டை கூராய்வு செய்த போது அந்த பாஸ்போர்ட்டின் படி அவர் கன்னட செல்ல இருந்தார்.

அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க சாட்சியின் முதல் விசாரணை இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

ஒம்/-xxxxxxxxxxx
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.

**Judicial Magistrate Court No.I, Chengalpattu.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No.472/2010 |
| Deposition of witness for | : Pw 1 |
| Name | : கிரண்குமார் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 40/2012 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.12.2012.

**முதல் விசாரணை-** சாட்சியை மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சியாக விசாரிக்கப்பட்டார்.

நான் எ1 எதிரி ரம்ஜாத் பாஸ்போர்டை பார்த்த போது அவருடைய பாஸ்போர்ட்டில் கனடா செல்லும் விசா ஒட்டப்பட்டுள்ளது. அந்த விசா போலியானது என்று தெரிய வந்தது. அதன் பின்பு நான் எதிரி ரம்ஜாத்தையும் அவர் அளித்த பாஸ்போர்ட் விசா ஆகியவற்றுடன் சீனியர் இமிக்ரேசன் ஆபிசர் நகராஜனிடம் ஒப்படைத்தேன். என்னிடம் காட்டப்படும் முதலாவது பக்கத்தில் உள்ள முகமது ரம்ஜாத் பெயரில் உள்ள பாஸ்போர்ட் அதசாஆ1 ஆகும். என்னிடம் காட்டப்படும் அதே பாஸ்போர்டில் பக்கம் 7ல் உள்ள பாஸ்போர்ட் பெயரில் உள்ள கனடா விசா போலியானது அது அதசாஆ 2 ஆகும். இது சம்மந்தமாக மத்திய குற்றப்பிரிவு ஆய்வாளர் என்னை விசாரித்தார். அதன் பின்று சீனியர் இமிக்ரேசன் ஆபிசர் நகராஜன் அவரிடம் இது பற்றி முறையிட்டேன். அவர் மேல் நடவடிக்கை எடுத்தார்.

கு.விசாரணை- செய்யப்படவில்லை

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

ஒம்/=XXXXXXXXXXX
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.

**Judicial Magistrate Court No.I, Chengalpattu.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : C.C.No.472/2010 |
| Deposition of witness for | : Pw 2 |
| Name | : சிவா |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 59/2012 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.12.2012.

**முதல் விசாரணை-** நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று பல்லாவரத்தில் வசித்து வருகிறேன். கடந்த 21.03.2009ம் தேதி நான் சென்னை விமான காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது காலை 6.45 மணிக்கு சென்னை விமான நிலையத்தில் பணியில் இருந்த போது பன்னாட்டு விமான நிலைய குடியுரிமை அதிகாரி திரு.எஸ்.நகராஜன் அவர்கள் ஆஜர் எதிரிகளோடு மற்றும் பாஸ்போர்ட் மற்றும் புகார் மனு ஆகியவற்றுடன் நிலையம் ஆஜராக கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனு ஆகியவற்றுடன் நிலையம் ஆஜராக கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனு தன்மைப்படி விமான நிலைய காவல் நிலைய குற்ற எண்- 65/09 பிரிவுகள் 21(பி) பாஸ்போர்ட் உ/இ 420, 468, 471 இதச படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை இது தான். அது அதசாஆ 3 ஆகும். அதன் பின்பு எ1 எதிரி அம்ஜாத்தை கைது செய்தேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் மகசரில் கைப்பற்றினேன். அது அதசாஆ4 ஆகும். அதன் பின்பு வழக்கு கோப்புகள் மற்றும் எதிரிகளுடன் சென்னை மத்திய குற்றப்பிரிவுக்கு அனுப்பி வைத்தேன்.

குறுக்கு விசாரணை- செய்யப்படவில்லை.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

ஒம்/=XXXXXXXXXXX
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.

**Judicial Magistrate Court No.I, Chengalpattu.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : C.C.No.472/2010 |
| Deposition of witness for | : Pw 3 |
| Name | : தெய்வேந்திரன் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 46/2012 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.12.2012.

**முதல் விசாரணை-** நான் தற்சமயம் எச்-3, தண்டையார்பேட்டை காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு நான் சென்னை மத்திய குற்றப்பிரிவு செயின்தாமஸ் மவுண்டில் ஆய்வாளராக டிம் 3யில் பணிபுரிந்த போது கடந்த 21.03.2009ம் தேதி பணியில் இருந்த போது எஸ் 2 ஏர்போர்ட் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சிவா அவர்கள் மத்திய குற்றப்பிரிவு போலி பாஸ்போர்ட் பிரிவு உதவி ஆணையாளர் அவர்களிடம் சமர்பித்த நிலைய குற்ற எண்- 65/09 வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை திரு.நகராஜன் சீனியர் இமிக்ரேசன் ஆபீசர் அவர்களின் புகார், 3 செல்கள், முகமது அம்ஜாத் என்பவரின் வாக்குமூலம் மற்றும் ஜி 6004652 என்ற எண்ணுள்ள ஒரிஜினால் பாஸ்போர்ட் அதன் நகல்கள் மற்றும் படிவம் 91, கைது குறிப்பு நமோ ஆகியவற்றுடன் எ1 எதிரியுடன் பெற்றுக் கொண்டு நான் வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு எதிரியிடம் வாக்குமூலம் பெற்று அன்றைய தினமே நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். மேலும் அன்றைய தினத்தில் திரு.நகராஜன் சீனியர் இமிக்ரேசன் ஆபிசர் அவரை விசாரித்து அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்பு சாட்சிகள் கிரண்குமார் உதவி இமிக்ரேசன் ஆபிசர் அவரை விசாரித்து அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். மற்றும் ஏர்போர்ட் உதவி ஆய்வாளர் திரு.சிவா அவர்களிடமும் வாக்குமூலம் பெற்றேன். ஆர்.சி.எண்- 009978- குற்றம் 4 உ/இ 2008 சி.எண்- 231-சி.ஓ.பி.- குற்றம் 09, நாள் 24.4.2009 உத்தரவுப்படி தொடர் விசாரணைக்காக சிடி பைல் கோப்பினை சிபிசிஐடி ஓசியூ 2 ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக சிபிசிஐடி ஓசியூ 2 ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை- செய்யப்படவில்லை**

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

ஒம்/-XXXXXXXXXXX
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.

**Judicial Magistrate Court No.I, Chengalpattu.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : C.C.No.472/2010 |
| Deposition of witness for | : Pw 4 |
| Name | : சீனிவாசன் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 50/2013 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.01.2013.

**முதல் விசாரணை-** நான் தற்சமயம் சாந்தோம் ஐரோட்டில் வசிக்கிறேன். நான் சொந்தமாக தொழில் செய்கிறேன். இதற்கு முன்பு நான் குவாலிட்டாஸ் மெடிக்கல் குப்ஸ் என்ற நிறுவனத்தில் பொது மேலாளராக வேலை பார்த்தேன். அந்த நிறுவனத்தின் உரிமையாளர் மலேசியாவை சேர்ந்த டாக்டர். நூரல் அமீா ஆவார். அந்த நிறுவனமானது மலேசியா நிறுவனத்தால் அங்கரிக்கப்பட்ட மலேசியாவிற்கு வேலைக்கு செல்லும் நபர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யும் வேலையை செய்து வருகிறேன். வேலுமணி என்பவருக்கு சொந்தமான பிரன்ஸ் டயகனா்ஸ் சென்டா் என்ற நிறுவனத்தில் இருந்து வேலுமணி என்பவா் எத்தனை நபா்களை எங்கள் நிறுவனத்தில் மூலம் வெளிநாட்டுக்கு செல்பவருக்கு எங்கள் நிறுவனத்தில் எத்தனை பேருக்கு மருத்துவ பரிசோதனை செய்தார்கள் என்று கேட்டார்கள். அதன் விவரங்களை எங்கள் கம்பியூட்டரில் இருந்து பதிவு இறக்கம் செய்து போலீஸ் டிப்பார்மெண்டில் கொடுத்தோம். அது இதுதான். நாங்கள் கொடுத்த அப்பிசியல் செம்பல் ரிசிப்பிட்யுடன் கூடிய விவரம் அதசாஆ 5 ஆகும். (மொத்த 5 பக்கங்கள் பக்க எண்- 207 முதல் 216 வரை உள்ள பக்கங்கள்). இது சம்மந்தமாக போலிசாா் என்னை விசாரித்தார்கள்.

**எ1 தரப்பு கு.வி** - நான் தாக்கல் செய்த அதசாஆ 5ல் எ1 பொறுத்து தகுதி சான்று வழங்கியுள்ளீா என்றால் அது மாதிரி சான்று ஆகும். காவல் ஆய்வாளா் அவா்கள் வந்து என்னை விசாரணை செய்தாா் அப்போது எதிரிகளை உடன் அழைத்து வரவில்லை. என்னை ஆய்வாளா் 2009 டிசம்பருக்கு முன்பு ஒரு நாளில் என்னை விசாரித்தாா். அந்த தேதி மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. 2009 டிசம்பா் மாதத்திற்கு பிறகு அந்த பணியில் இல்லை. நான் பணியில் இருந்து சென்றுவிட்டதற்கு பிறகு எதிரிகள் சம்மந்தமான ஆவணம் அவா்கள் மருத்துவ பரிசோதனைக்கு வந்திருந்தாா் இருந்து இருக்கும். என்னுடைய நிறுவனத்தில் உள்ள மருத்துவா் பரிசோதனை செய்து சான்று வழங்குவாா்கள். சான்று நான் வழங்குவது இல்லை.

**எ2 தரப்பு கு.வி** - நாங்கள் மலேசியா அரசால் அங்கரிக்கப்பட்ட நிறுவனம் என்பதால் மருத்துவ பரிசோதனை சம்மந்தமான விசயங்கள் குறித்து பதில் அளிக்க முடியுமா என்றால் நாங்கள் பதில் அளிக்க வேண்டும். அதசாஆ 5ல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு எ1 பரிந்துரை செய்தார் என்பதற்கான குறிப்பு உள்ளதா என்றால் மேற்கண்ட அதசாஆ 5ல் இல்லை எங்களுடைய கணிணி டேட்டா பேசில் உள்ளது. அதசாஆ5 னாது போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையெழுத்த எதுவும் செய்யாமல் கொடுக்கப்பட்ட மாதிரி என்றால் சரிதான். இதில் குறிடப்பட்டுள்ள பெயர்களை போலிசார் கேட்டுகொண்டார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நபர்களுக்கு வேண்டும் என்றால் கொடுக்கலாம் 100 நபர்களுக்கு வேண்டி அதசாஆ 5 ஆவணத்தை கொடுத்தேன். அதில் உள்ள பெயரை யார் பரிந்துரை செய்தார் என்று எனக்கு தெரியாது.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

ஓம்/=XXXXXXXXXXX
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.

**Judicial Magistrate Court No.I, Chengalpattu.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : C.C.No.472/2010 |
| Deposition of witness for | : Pw 5 |
| Name | : முகமது ரபி உல்லா உசேன் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 31/2014 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2014.

**முதல் விசாரணை-** நான் தற்போது அம்பத்தூரில் குடியிருக்கிறேன். நா்ன டிரான்ஸ் போர்ட்டி நடத்தி வருகிறேன். ஆஜா் எ1 எதிரியை எனக்கு தெரியும். அவா் என் தங்கை கணவா் ஆவார். கடந்த 2008 ஆண்டு நான் அம்பத்தூரில் உள்ள உதய வாட்டா் சா்வீஸில் இருந்த போது வேலுமணி என்பவா் அங்கு வந்தார். அவா் தொலைபேசி மூலம் வெளிநாட்டு வேலைக்கு அனுப்புவது குறித்து பேசிக் கொண்டிருந்தார். அப்போது நான் அவரிடம் என்னுடைய மைத்துனரும் வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு வந்துள்ளார். அவா் மீண்டும் வெளிநாடு செல்லவேண்டும் என்று அவரிடம் கூறினேன். அவா் என்னிடம் என் மைத்துனரின் தொலைபேசி எண்ணை பெற்றுக் கொண்டார். பிறகு ஒரு வாரம் கழித்து நானும் என்னுடைய மைத்துனரும் வேலுமணியை ஐ.சி.எப். பேருந்து நிறுத்தத்தில் சந்தித்தோம். அப்போது என் மைத்துனரும் வேலுமணியும் வெளிநாடு செல்வது குறித்து பேசிக் கொண்டார்கள். அதன் பிறகு இரண்டு பேரும் அவா்கள் இடையே வெளிநாடுகள் குறித்த விவரங்களை பேசிக் கொண்டிருந்தார்கள். அவா்கள் இருவரும் அவா்களிடம் இருந்த ஆவணங்களை காண்பித்தார்கள். வேலுமணி கனடா நாட்டிற்கு செல்ல ரூ.6,00,000/- ஆகும் என்று கூறினார். அதன் பிறகு ஒரு வாரம் கழித்து ஐ.சி.எப். என்ற இடத்தில் என்னுடைய மைத்துனா் வேலுமணியிடம் ரூ.50,000/- த்தையும் சில ஆவணங்களையும் கொடுத்தார். அதன் பிறகு அவருக்கு விசா வந்தது.

அரசு தரப்பு வழக்கறிஞா் கேட்டுக் கொண்டதற்கிணங்க எ2 எதிரியை அடையாளம் காட்ட வேண்டும் என்பதால் முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

ஒம்/–xxxxxxxxxxx
நீதித்துறை நடுவா் எண்.1,
**செங்கல்பட்டு.**

**சிசி எண்- 472/2010**

**அசா 5 முகமது ரபில்லா**

**முதல் விசாரணை-** இந்த வழக்கில் ஆஜராகியிருக்கும் 2வது எதிரி வேலுமணி தான். அவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். நான் நடந்ததைச் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை 2வது எதிரிக்காக**

வேலுமணி என்பவர் யார் என்று எனக்கு தெரியாது என்றாலும், தற்போது அவர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் போது போலிசார் சொன்னதின் பேரில் தான் நான் அவரை அடையாளம் காட்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் வேண்டுகோளின் பேரில் தான் நான் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் எதிரி என் மைத்துனர் என்று சொன்னால் சரிதான். அவரை காப்பாற்ற வேண்டும் என்றும், அதனால் தான் வேலுமணியை தெரியும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை- இல்லை**

Sd/(xxxx)

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

ஒம்/=XXXXXXXXXXX
நீதித்துறை நடுவர் எண்.1,
**செங்கல்பட்டு.**

**Judicial Magistrate Court No.I, Chengalpattu.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No. 472/2010 |
| Deposition of witness for | : PW 6 |
| Name | : ஹமிருன்னிசா |
| Father`s / Husband's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Religion | : |
| Age | : /2017 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2017.

**முதல் விசாரணை-** நான் குடும்பத்தலைவியாக இருந்து வருகிறேன். கடந்த 09 வருடங்களுக்கு முன்னால் என் மகன் முகமது அம்சத் என்பவர் வேலை சம்மந்தமாக வெளிநாடு செல்ல வேண்டி ரபீக் என்பவர் மூலம் வேலுமணி என்பவரை அறிமுகம் ஆனார். என் மகனை வேலுமணி என்பவர் கனடா அனுப்புவதற்காக ரூ.6,00,000/- கேட்டார்கள். என் மகனிடத்தில் ரூ.2,00,000/- இருந்தது. அதை கொடுத்த பின்னர் நான் இரண்டு தவணைகளாக ரூ.2,00,000/- ரபீக் கொடுத்தோம். அவர் வேலுமணியிடம் கொடுத்தார். கனடாவிற்கு என் மகனை அனுப்பவில்லை. பாஸ்போர்டடில் என் மகனின் போட்டோவும் ஆனால் வேறொருவரின் பெயர் இருந்தது. அதனை விமான நிலையத்தில் பிடித்துவிட்டார்கள். என் மகனை 15 நாட்கள் நீதிமன்ற காவலில் வைத்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். நான் நடந்ததைச் சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -** பாஸ்போர்டில் என் மகன் போட்டோ இருந்ததையும் வேறொரு பெயர் இருந்ததையும் நான் முதல் விசாரணையில் சொன்னவாறு போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நாங்கள் ரபிக் என்பவரிடம் பணம் கொடுத்ததை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ரபீக் என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் மருமகனின் அண்ணன் ஆவார். மேற்சொன்ன தொகையை நான் பேங்கில் வைத்திருந்தேனா என்றால் இல்லை. அடகுகடையில் நகையை வைத்து கொடுத்தேன். அந்த அடகுகடை நகை ரசீதை போலிசார் விசாரணையில் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். என் மகனை கைது செய்த அன்று காவல் நிலையத்தில் நான் என் மகனை சென்று பார்த்தேன் என்றால் சரிதான். என் மகனை கைது செய்துவிட்டதாக அன்றைய தினத்தில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் செய்தேன்.

**மறுவிசாரணை - இல்லை**

Sd/(xxxx)

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

ஒம்/-xxxxxxxxxxx
நீதித்துறை நடுவர் எண்.1,
**செங்கல்பட்டு.**

**Judicial Magistrate Court No.I, Chengalpattu.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No. 472/2010 |
| Deposition of witness for | : PW 7 |
| Name | : ராஜேந்திரன் |
| Father`s / Husband's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2017 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.03.2017.

**முதல் விசாரணை-** நான் சென்னை மண்டல அலுவலகம் வடக்கிலிருந்து முதன்மை மேலாளராக இந்தியன் வங்கியில் பணிபுரிந்து 31.01.2017 ல் பணிஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2008 ஜீன் மாதத்திலிருந்து 2010 ஏப்ரல் வரை சென்னை ஜவஹர் நகர் இந்தியன் வங்கி கிளையில் முதுநிலை மேலாளராக பணியில் இருந்த போது ஜீன் மாதம் 2009ல் சிபிசிஐடி போலிசார் எங்கள் வங்கியில் கணக்கு வைத்திருந்த ஜோதி என்பவரின் சேமிப்பு கணக்கு குறித்து விசாரணை செய்தார்கள். அவருடைய கணக்கு தொடங்குவதற்குண்டான விண்ணப்பம், மாதாந்திர கணக்கு பட்டியல், அதனுடன் இணைக்கப்பட்ட சான்றிதழ்கள் ஆகியவற்றை எழுத்து மூலமாக கேட்டார்கள். எங்கள் வங்கியிலிருந்து மேற்சொன்ன நபருக்குண்டான ஆவணங்களின் ஜெராக்ஸ் நகல்களை ஆய்வாளரிடத்தில் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் எங்கள் வங்கியிலிருந்து வங்கி கணக்காளரிடம் விவரங்கள் கேட்டு ஆய்வாளரிடத்தில் கொடுத்த 26.06.2009 தேதியிட்ட வேண்டுகோள் கடிதம் அதசாஆ 6 ஆகும். அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க எங்கள் வங்கியிலிருந்து ஆய்வாளர் அவர்களுக்கு 27.06.2009 தேதியிட்ட நான் கொடுத்த கடிதம் அதசாஆ 7 ஆகும். அந்த கடிதத்துடன் மாதாந்திர கணக்கு பட்டியல்கள் வரிசைகள் (3) அதசாஆ 8 ஆகும். வங்கி கணக்கு தொடங்குவதற்கு வழங்கப்பட்ட விண்ணப்ப படிவத்தின் நகல் (2 தாள்கள்) அதசாஆ 9 ஆகும். ஜோதி என்பவருடைய ஓட்டுனர் உரிமம் மற்றும் குடும்ப அட்டையின் நகல் முறையே அதசாஆ 10 மற்றும் அதசாஆ 11 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார். நான் நடந்தைச் சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -இல்லை**

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

ஒம்/-xxxxxxxxxxx

நீதித்துறை நடுவர் எண்.1,

**செங்கல்பட்டு.**

**Judicial Magistrate Court No.I, Chengalpattu.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No. 472/2010 |
| Deposition of witness for | : PW 8 |
| Name | : J.நாகராஜன் |
| Father`s / Husband's Name | : P.K. ஜெயராமன் (Late) |
| Village | : Old No.7, New No.13, மூர்த்தி தெரு, |
| Taluk | : மேற்கு மாம்பலம், சென்னை |
| Religion | : |
| Age | : /2017 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.07.2017.

**முதல் விசாரணை-** கடந்த 2008 லிருந்து 2009 ஆகஸ்ட் 31 வரை சென்னை விமான நிலையத்தில் சீனியர் இமிகிரேஷன் ஆபிசராக பணிபுரிந்த போது இமிகிரேஷன் அலுவகத்திற்கு நான் சூப்பர்வைசர் ஆபிசராக இருந்தேன். காலை 7.30 மணியிலிருந்து மாலை 7.30 மணி வரை எங்கள் பணிபுரியும் நேரம் ஆகும். மாலை 6 மணியளவில் என் கவுண்டர் ஆபிசர் கிரண்குமார் என்பவர் என்னிடம் ஒரு பாஸ்போர்ட் காண்பித்து இதன் விசா போலியானது என்றும் கிரண்குமார் அதன் பேரில் அம்சத் என்பவரை விசாரித்து கொண்டிருந்தார். சோதனையில் அந்த விசா போலியானது என்று தெரிய வந்தது. நானும் கிரண்குமாரும் அது போலியான விசா என்று தெரிந்த உடன் அந்த நபரை வெளியே விடாமல் பிடித்து வைத்துக்கொண்டு மீனம்பாக்கம் விமான நிலைய காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தோம். நாங்கள் பிடித்து வைத்திருந்த நபர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கிறார். அவருடைய பெயர் அம்ஜத். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் அதசாஆ 12 ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர். நான் நடந்ததைச் சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -** வழக்கறிஞர்கள் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

ஒம்/-XXXXXXXXXXX
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.

Judicial Magistrate Court No.I, Chengalpattu.
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No. 472/2010 |
| Deposition of witness for | : PW 9 |
| Name | : குலோத்துங்கன் |
| Father Name / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : -2017 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2017.

**முதல் விசாரணை -** நான் தற்போது இந்தியன் பாங்கில் அசிஸ்டண்ட் ஜெனரல் மேனேஜராக பாண்டிச்சேரி மெயின் பிராஞ்சில் பணி செய்து வருகிறேன். நான் 2009ல் ஆத்தூர் பிராஞ்ச் மேனேஜராக இருந்த போது 15.03.2009 தேதியிட்ட கடிதத்தில் மகாலட்சுமி என்பவரின் ஸ்டேட்மெண்ட்டை போலிசார் என்னிடம் கேட்டார்கள். நான் போலிசார் கேட்டதின் பேரில் எங்கள் அதிகாரியான ஜூவர்னல் மேனேஜரிடமிருந்து உத்தரவு பெற்று மகாலட்சுமியின் ஸ்டேட்மெண்டை போலிசாரிடம் கொடுத்தேன். 15.03.2009ல் ஓட்டேரி இந்தியன் பாங்க் பிராஞ்சில் சுமார் ரூ.11,000/- கணக்கு வைத்திருந்தார். அவர் வைத்திருந்த கணக்கிற்குண்டான ஸ்டேட்மெண்டை நான் போலிஸ் அதிகாரியிடம் கொடுத்தேன். 01.03.2009 முதல் 31.03.2009 வரைக்கான ஸ்டேட்மெண்டை அவர்களிடம் கொடுத்தேன். Fake பாஸ்போர்ட், விசா சம்மந்தமாக இந்த ஸ்டேட்மெண்டை கேட்டனர். போலிசார் என்னிடம் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அதசாஆ 12 ஆகும். மகாலட்சுமி என்பவரின் ஸ்டேட்மெண்ட் அதசாஆ 13 ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -** வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை

Sd/(xxxx)

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

ஒம்/—xxxxxxxxxxx
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.

Judicial Magistrate Court No.I, Chengalpattu.
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No. 472/2010 |
| Deposition of witness for | : PW 10 |
| Name | : சுரேஷ் |
| Father Name / Husband Name | : கேசவன் நாயர் |
| Village | : தாழத்துவீட்டில், பள்ளூர் போஸ்ட், |
| Taluk | : திருச்சூர், கேரளா |
| Calling | : |
| Religion | : |
| Age | : -2017 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2017.

**முதல் விசாரணை-** நான் தற்போது ரிலேஷன்ஷிப் மேனேஜராக லஷ்மி விலாஸ் பேங்கில் கோழிக்கோடு பிராஞ்சில் பணிபுரிந்து வருகிறேன். சிபிசிஐடி போலிசார் 20.06.2009ல் என்னை விசாரணை செய்த போது தேனாம்பேட்டை கிளையில் உள்ள மணப்புரம் பைனான்ஸில் பிராஞ்ச் மேனேஜராக பணியில் இருந்தேன். வேலுமணி என்ற நபருக்கு ரூ.19,000/- க்கான லோன் டிரான்ஸ்பர் செய்ததை குறித்து என்னிடம் விசாரித்தார்கள். நான் உடனே தலைமை அலுவலகம் உள்ள மலப்பாடு, திருச்சூர் மாவட்டம், கேரளாவில் உள்ள எங்களுடைய தலைமை அலுவலகத்தில் இது சம்மந்தமாக கேட்டேன். அவர்கள் இந்த பெயரில் ஆத்தூர் பிராஞ்சில் டிரானஸ்ஷாக்ஷன் நடந்ததாக ஹெட் ஆபிஸ் கன்வார்ம் செய்ததற்கு பிறகு நான் இது சம்மந்தமாக ஆத்தூர் உள்ள மணப்புரம் பிராஞ்சிலும் கன்வார்ம் செய்த பிறகு பேமெண்ட் செய்தது குறித்து விசாரணை செய்த பிறகு நான் சிபிசிஐடி போலிசாரிடம் அதை பற்றி சொன்னேன். அம்ஜத் என்பவர் லோன் அமௌண்டை ஆத்தூரில் உள்ள வில்வமணி என்ற பெயருக்கு டிரான்ஸ்ஷாக்ஷன் செய்திருந்தார். அந்த அமௌண்ட் அவருடைய பெயர் சரியாக இல்லாததால் அம்ஜத் என்பவர் தேனாம்பேட்டை மணப்புரம் பிராஞ்சில் நான் அந்த பிராஞ்சிற்கு வருவதற்கு முன்னரே பெயர் வில்வமணிக்கு பதில் வேலுமணி என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டதில் நான் என்னுடைய ஹெட் ஆபிசில் கன்வார்ம் செய்த பிறகு வேலுமணி என்பவருக்கு பணத்தை கொடுத்துவிட்டார்கள். அந்த தகவலை சிபிசிஐடி போலிசாரிடம் கொடுத்தேன். பின்னர் வேலுமணி என்பவர் தனது ஐடி புரூப்பை காண்பித்து தொகையான ரூ.19,000/- வேலுமணி ஆத்தூரில் பெற்றுக் கொண்டார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் சிபிசிஐடி போலிசார் எங்களுடைய மணப்புரம் பைனான்சிற்கு ஆவணங்கள் வேண்டும் என்று கேட்டுக்கொடுத்த கடிதம் அதசாஆ 14 ஆகும். சென்னை தேனாம்பேட்டை பிராஞ்சில் எதிரி முகமது அம்ஜத் ரூ.19,000/- அனுப்ப வேண்டும் என்று எழுதிக் கொடுத்த கடிதம் அதசாஆ 15 ஆகும். வேலுமணி என்பவருடைய பான்கார்டு அதசாஆ 16 ஆகும். பெயர் தவறாக கொடுத்துவிட்டதாக கூறி சென்னை தேனாம்பேட்டை மணப்புரம் பைனான்சிற்கு எதிரி முகமது அம்ஜத் எழுதிக் கொடுத்த கடிதம் அதசாஆ 17 ஆகும். அந்த கடிதத்தில் எதிரி அம் ஜத்தினுடைய பான்கார்டு ஜெராக்ஸ் செய்யப்பட்டுள்ளது. அதசாஆ 14 முதல் அதசாஆ 17 வரை உள்ள

ஆவணங்கள் நகல் ஆவணங்கள் என்பதால் எதிரி தரப்பில் கடுமையான ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை - வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

ஒம்/-xxxxxxxxxxx
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.

Judicial Magistrate Court No.I, Chengalpattu.
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No. 472/2010 |
| Deposition of witness for | : PW 11 |
| Name | : ஜோதி |
| Father`s Name | : முருகன் |
| Village | : No.272, ஜே.ஜே.ஆர். நகர், |
| Taluk | : வியாசர்பாடி, சென்னை- 39. |
| Religion | : |
| Age | : /2018 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2018.

**முதல் விசாரணை-** நான் தற்போது வடபெரும்பாக்கத்தில் உள்ள ஒரு ஸ்டீல் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 2008ல் வேலுமணி என்பவரை முன்பு எனக்கு தெரியாது. பின்னர் நான் தெரிந்து கொண்டேன். மகாலட்சுமி என்பவர் என்னுடன் போர்வெல் வேலை செய்யும் போது உடன் பணிபுரிந்தவர். அப்போது மகாலட்சுமி என்பவர் தனக்கு ஊரிலிருந்து பணம் வருவதாகவும் அதற்காக பேங்க் அக்கவுண்ட் நெம்பர் ஏதும் இருந்தால் கொடுக்கும்படி என்னிடம் கேட்டார். நான் எதற்கு என்று கேட்டதற்கு ஊரிலிருந்து பணம் வரும் என்று சொன்னார். ஜவஹர் நகரில் உள்ள இந்தியன் பேங்க் அக்கவுண்டை அவரிடம் கொடுத்தேன். அந்த அக்கவுண்டில் முதலில் ரூ.15,000/- பின்னர் ரூ.10,000/- வந்தது. மகாலட்சுமி என்பவர் தன்னுடைய கணவர் வேலுமணி என்று தெரிவித்ததன் மூலம் எனக்கு வேலுமணியை தெரியும். நான் வேலுமணியை பார்த்துள்ளேன். அந்த பணத்தை யார் அனுப்பினார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த பணத்தை எடுத்து வேலுமணியிடம் கொடுத்தேன். மகாலட்சுமி மூலம் அவருடைய கணவர் வேலுமணி என்பவர் பாஸ்போர்ட் ரெடி பண்ணி தருவது போன்ற வேலை செய்வதாக மகாலட்சுமி தனது கணவர் வேலுமணியை பற்றி சொல்லும் போது சொன்னார். இந்தியன் பாங்க் அக்கவுண்ட் ஓபனிங் ஃபார்மில் என்னுடைய கையொப்பம் உள்ளது. அந்த அக்கவுண்ட் ஃபார்ம், பேங்க் ஸ்டேட்மெண்ட் ஏற்கனவே அசா7 மூலம் அதசாஆ 7 முதல் 11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-** மேற்சொன்ன சம்பவத்திற்கு முன்பு வேலுமணியை எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி பணத்தை எனக்கு பாஸ்போர்ட் எடுப்பதற்காக தான் வேலுமணிக்கு நான் எடுத்துக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. யார் என்னுடைய வங்கி கணக்கில் பணம் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் வேலுமணிக்கும் சம்மந்தமில்லை என்றாலும் போலிசார் கேட்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை- இல்லை** Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

ஒம்/—xxxxxxxxxxx
நீதித்துறை நடுவர் எண்.1,
**செங்கல்பட்டு.**